**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.202/2020**

**நாள் : 27.02.2026**

**ம.சா. 1 திரு.சின்னசாமி**

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்து 4 வருடமாகிறது. தேதி எனக்கு ஞாபகமில்லை. திருப்பத்தூர் பேருந்து நிலையம் அருகே விபத்து ஏற்பட்டது. விபத்தில் எனக்கு தலை, வலது காலில் பலத்த காயம் ஏற்பட்டது. வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு ராடு வைக்கப்பட்டது. கிருஷ்ணகிரி, ஒசூர், வாணியம்பாடி மருத்துவமனைகளில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். விபத்து நான் பேருந்து நிலையத்தில் பனங்கிழங்கு விற்றுக்கொண்டிருந்த நிலையில் அங்கிருந்த பள்ளத்தில் விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் விபத்து தேதியிலிருந்து நாளது தேதிவரை சிகிச்சை எடுத்துவருவதற்கான தொடர் சிகிச்சை ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் மருத்துவ பில்களை தாக்கல் செய்துள்ளேன். 2023-2024ல் மேற்கொள்ளப்பட்ட சிகிச்சையானது தலைவலி, உடல்நடுக்கம், வயிற்றிவலிக்காக எடுத்துக்கொண்ட சிகிச்சை என்றால் சரியல்ல. விபத்தின் காரணமாக ஏற்பட்ட விளைவு என்று சாட்சி கூறுகிறார். மருத்துவ விடுப்பு சான்றிதழில் விபத்தினால் தலைவலி, உடல்நடுக்கம், வயிற்றிவலி ஏற்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.5 ஆவணப்படி அருண் மருத்துவமனையில் ரூ.51,618/-க்கு சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான அசல் பில்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி மருத்துவ பில்கள் ஜெராக்ஸ் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பில்கள் வயோதிகம் காரணமாக சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கானவை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின்கீழ் கோரியுள்ள தொகை மிகைப்படியானது என்றால் சரியல்ல.

விபத்திற்கு அரசு பேருந்தின் ஓட்டுநர் எந்தவிதத்திலும் காரணமல்ல என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.